TNTT080001102025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
திருவள்ளுவராண்டு 2057-ம் வருடம் பங்குனி திங்கள் 26 ம் நாள் வியாழக்கிழமை
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை
அசல் வழக்கு எண்.104/2025
(CNR.No.TNTT-08-000110-2025)

1.பேச்சியம்மாள்
2.பாபுகுமார்
3.முத்துகனி
4.முத்துபாண்டி .... வாதிகள்

..எதிர்..

1.வட்டாட்சியர், ஸ்ரீவைகுண்டம்
2.தமிழ்நாடு அரசுக்காக அதன்
தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.ஜோதிலெட்சுமி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.A.ஷாஜஹான் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதவுரைகள் கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (09.04.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்....

## தீர்ப்புரை

06.06.2007 ல் இறந்து போன வேம்புவுக்கு வாதிகள் மட்டும் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரியும், அவ்வாறே 1 ம் பிரதிவாதி வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. வழக்குரை சுருக்கம்

அ)வாதிகளின் தந்தை வேம்பு-க்கு 2 மனைவிகள். வேம்பு பாப்பா என்பவரை கடந்த 44


HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.09 18:52:23 +0530

ஆண்டுகளுக்கு முன்பு இந்து முறைப்படி முதலாவதாக திருமணம் செய்தார். வேம்புவுக்கு முதல் மனைவி மூலமாக வாரிசுகள் இல்லை. மேற்படி பாப்பா திருமணம் ஆன 6 மாதம் காலத்திற்குள்ளாகவே காலம் சென்றுவிட்டார். வேம்புவின் அறியாமையினால் பாப்பாவின் இறப்பு பதிவு செய்யப்படவில்லை. வேம்பு 1ம் வாதி பேச்சியம்மாள் என்பவரை கடந்த 43 ஆண்டுகளுக்கு முன்பு இந்து முறைப்படி திருமணம் செய்ததன் பயனாக 2 முதல் 4 வாதிகள் பிறந்தனர்.

ஆ)கதவு எண்.7/211 கீழதூதுகுழு, செய்துங்கநல்லூரில் வைத்து வேம்பு 06.06.2007 ல் வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். 1ம் வாதி வாரிசு சான்று கேட்டு இணையதளம் மூலமாக சமர்ப்பித்த மனுவை பரிசீலனை செய்த 1ம் பிரதிவாதி வாதிககளின் தகப்பனாருக்கு 2 மனைவிகள் என்பதால் தள்ளுபடி செய்ய உத்திரவிட்டுள்ளார். எனவே, 06.06.2007 ல் இறந்து போன வேம்புவுக்கு வாதிகள் மட்டும் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரியும், அவ்வாறே 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.எதிர்வழக்குரை சுருக்கம்:**

வழக்குரை சங்கதிகள் வரிவரியாக மறுக்கப்பட்டு அவற்றை வாதியே நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. உண்மையில், வேம்புவின் முதல் மனைவி பாப்பா ஆவார். வேம்புவுக்கும், பாப்பாவுக்கும் இடையேயான திருமணத்தின் பயனாக குழந்தைகள் எதுவும் இல்லை. பாப்பா உயிருடன் இருந்த போதே பேச்சியம்மாள் வேம்புவுடன் சேர்ந்து வாழ்ந்துள்ளார். அடுத்த 1 ஆண்டில் பாப்பா இறந்துவிட்டார். வேம்பு முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது 1ம் வாதியை திருமணம் செய்ததால் 1ம் வாதி வேம்புவுக்கு வாரிசாகமாட்டார். ஆகவே, வாதிகள் கேட்ட பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல. தாவா வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.09 18:52:28 +0530

TNTT080001102025

4.எழுவினாக்கள்

1. காலம் சென்ற வேம்புவுக்கு வாதிகள் மட்டும் வாரிசுகள் என்பது உண்மையா?
2. வேம்புவின் முதல் மனைவி உயிருடன் இருந்த போதே 1ம் வாதி வேம்புவுடன் சேர்ந்து வாழ்ந்தார் என்பது என்பது உண்மையா?
3. வாதிகள் கோரும் விளம்புகைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிகள் கோரும் செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
5. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் யாது?

5.வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆகவும், 4ம் வாதி வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

எழுவினாக்களுக்கான தீர்வு

6.ஸ்ரீவைகுண்டம் வட்டம், செய்துங்கநல்லூர், கீழதூதுகுழியில் கதவு எண்.7−211ல் வசித்து வந்த வேலாயுதம் மகன் வேம்பு கடந்த 06.06.2007ம் தேதி இறந்து விட்டார் என்று வா.சா.ஆ.1 இறப்பு சான்றிதழிலிருந்து உறுதியாகிறது. வேம்புவின் இறப்பிற்கு வாரிசு சான்றிதழ் கோரி 1ம் வாதி தாக்கல் செய்த மனுவானது வா.சா.ஆ.2 வாயிலாக நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, தாவா வழக்கு வாதிகள் மட்டுமே வேம்புவின் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரியும், அவ்வாறே வாரிசு சான்றிதழ் வழங்க செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.இறந்து போன வேம்பு மற்றும் வாதிகள் இந்து மதத்தை சார்ந்தவர்கள். வேம்பு அவரது சொத்துக்களைப் பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளதாக வழக்குரையில் சொல்லப்படவில்லை. இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 3(f) உயில் எழுதாமல் இறந்து போன நபரின் சொத்துக்களை அடைய உரிமை உடைய நபர்கள் வாரிசுகள் என்று கூறுகிறது. மேற்படி சட்டத்தின் பிரிவு 8 உயில் எழுதாமல் இறந்து போன இந்து



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.09 18:52:32 +0530

ஆண் ஒருவரின் சொத்துக்களை முதலில் முதலாம் அட்டவணையில் கண்ட வாரிசுகள் அடைவார்கள் என்று கூறுகிறது.

8.வேம்பு முதலில் பாப்பா என்பவரை 44 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்ததாகவும், திருமணமான 6 மாத காலத்திற்குள்ளேயே பாப்பா இறந்து விட்டதாகவும், பாப்பாவுக்கும், வேம்புவுக்கும் குழந்தைகள் இல்லை என்றும், பாப்பா இறந்த பிறகு வேம்பு 1ம் வாதியை 2வதாக திருமணம் செய்ததன் பயனாக 2 முதல் 4 வாதிகள் பிறந்ததாகவும், வழக்குரையில் சங்கதிகள் முன்னிட்டு அதன்படி வாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. 3, 4 வாதிகளின் பள்ளி மாற்றுச் சான்றிதழ்களின் நகல் வா.சா.ஆ.7, 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 3, 4 வாதிகளின் தந்தை பெயர் வேம்பு என்று சொல்லப்பட்டுள்ளது. வாதிகளின் ஆதார் அட்டைகளின் நகல்கள் வா.சா.ஆ.3 முதல் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

9. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் வேம்புவுக்கும், பாப்பாவுக்கும் இடையேயான திருமணத்தின் பயனாக குழந்தைகள் எதுவும் இல்லை என்றும் பாப்பா இறந்துவிட்டார் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பாப்பா உயிருடன் இருந்த போதே பேச்சியம்மாள் வேம்புவுடன் சேர்ந்து வாழ்ந்ததாகவும், வேம்பு முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது 1ம் வாதியை திருமணம் செய்ததால் 1ம் வாதி வேம்புவுக்கு வாரிசாகமாட்டார் எனும் சங்கதிகளை நிரூபிக்க பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணம் எதுவும் முன்னிடப்படவில்லை. வேம்புவின் முதல் மனைவி பாப்பா இறந்த பிறகு தான் 1ம் வாதியை வேம்பு திருமணம் செய்து கொண்டுள்ளார் என்பதை பாதிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை.

10.இத்தகு சூழ்நிலையில் 1ம் வாதியுடனான வேம்புவின் திருமணம் இந்து திருமணச் சட்டம் பிரிவு 5ன் கீழ் செல்லத்தக்க திருமணம் என்பதால் உயில் எழுதாமல் இறந்து போன வேம்புவுக்கு மனைவியான 1ம் வாதியும், மக்களான 2 முதல் 4 வாதிகளும் வாரிசுகள் ஆவர். வேம்புவின் பெற்றோரான வேலாயுதம், பேச்சி மற்றும் வேம்புவின் முதல் மனைவி பாப்பா ஆகியோரின் இறப்பு சான்றிதழ்கள் தாக்கல் செய்யப்படவில்லை



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.09 18:52:36 +0530

எனினும், அவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாட்சியம் இல்லை.

11.மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில், வேம்புவின் முதல் மனைவி பாப்பா உயிருடன் இருந்த போது 1ம் வாதி வேம்புவுடன் சேர்ந்து வாழ்ந்தார் என்பது உண்மையல்ல என்று எழுவினா2 க்கும், இறந்து போன வேம்புவுக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று எழுவினா1 க்கும், அவ்வாறே வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று எழுவினா3 க்கும், செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று எழுவினா4 க்கும், வாதிகளுக்கு கிடைக்கத்தக்க பரிகாரம் எதுவும் இல்லை என்று எழுவினா5 க்கும் தீர்வு காணப்படுகிறது.

**12. முடிவாக,**

**அ)காலம் சென்ற வேம்புவுக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று விளம்புகைப் பரிகாரம் வழங்கியும்,**

**ஆ)இத்தீர்ப்பு தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் 1ம் பிரதிவாதி இறந்து போன வேம்புவிற்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கியும் வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.09 18:52:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:

வா.சா.1–பேச்சியம்மாள்
வா.சா.2–முத்துபாண்டி

TNTT080001102025

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 06.06.2007 | 1ம் வாதியின் கணவர் வேம்பு இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | 14.07.2025 | 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு கொடுத்த மேலெழுத்தின் பதிவிறக்க நகல் |
| 3. | வா.சா.ஆ.3 | – | 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 4. | வா.சா.ஆ.4 | – | 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 5. | வா.சா.ஆ.5 | – | 3ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 6 | வா.சா.ஆ.6 | – | 4ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 7 | வா.சா.ஆ.7 | – | 3ம் வாதியின் கல்வி மாற்று சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 8 | வா.சா.ஆ.8 | – | 4ம் வாதியின் கல்வி மாற்று சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u> இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.09 18:52:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

TNTT080001102025

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
ஸ்ரீவைகுண்டம்.
வரைவு/சீரான – தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.104/2025
நாள்.09.04.2026